ஓம்

ஜெய் ஸ்ரீசாயிராம



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

# திருவூஞ்சல் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ சாயிராம் துணை

# பகவான்

# ஸ்ரீ சத்ய சாயி பாபா

# ஊஞ்சல் பாடல்கள்

★

பஜனாமிர்தவாரி

ஸ்ரீ வி. நாராயணதாஸ் அவர்கள்

ஆலோசனையின் பேரில்

திரு. சி. பரராஜசிங்கம் அவர்கள்

( பசிக்கவி )

இயற்றியது.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

பிரேமாவதார மூர்த்தியாகிய
பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்
திருப்பாத கமலங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

முதற் பதிப்பு : 23 - 11 - 1970

இரண்டாம் பதிப்பு : 23 - 11 - 1989

# முகவுரை

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களுடைய பிறந்த தின விழாவில் திரு ஊஞ்சல் ஓர் அற்புதமான நிகழ்ச்சியாகும்.

''சாய் ஜூலா'' என்று அழைக்கப்படும் இந்த ஊஞ்சல் நிகழ்ச்சி எவ்வளவு அற்புதமானது, எவ்வளவு அலங்கார மானது, எவ்வளவு ஆனந்தமானது என்பதை புட்டபர்த்தியிலே நிகழ்கின்ற பகவானுடைய பிறந்த தின விழாவில் கலந்து கொண்டவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

விழாவின் கடைசி தினத்தில் பூரணச் சந்திரிகா மண்டபத்தின் மேடைமீது ஓர் ஊஞ்சல் அமைக்கப்பட்டிருக்கும். வழக்கமாக கனகாம்பர வண்ணத்தில் ஆடை தரித்து விளங்குபவரான ஸ்ரீ சாயி பாபா, ஊஞ்சல் நிகழ்ச்சிக்கு வரும் போது வெண்பட்டு அங்கி தரித்து, விண்ணகத்து அன்னம் போல ஆடி அசைந்து வருவார். ஊஞ்சலில் வந்து அமர்ந்து ஸ்ரீ ரங்கநாதர் பள்ளி கொள்வது போல வலக்கரத்தில் தலையைத் தாங்கி, சாய்ந்து சரிந்து உல்லாசமாக உட்கார்ந்திருப்பார்.

அந்தத் திருக்காட்சி ஒரு தெய்வீகக் காட்சியாக விளங்கும்!

அவர் உட்கார்ந்ததும் தண்பொழிலின் அலைபோல அந்த ஊஞ்சல் அசைவுறும். அகில இந்தியப் புகழ்வாய்ந்த இசை மேதைகளான பாடகிகள் அப்போது பாடுவார்கள். இந்த வரிசையில் திருமதி. எம். எஸ். சுப்புலக்ஷ்மி, திருமதி. லதா மங்கேஷ்கார், திருமதி. பி. சுசீலா, திருமதி எஸ். ஜானகி போன்றவர்களே பாடுவது வழக்கம்.

இங்கு இந்த ஊஞ்சல் பாடல்களை வருடா வருடம் தொடர்ந்து பாடி வருபவர் கோகில கான இசையரசி திருமதி. கௌரீஸ்வரி ராஜப்பன். அவருடைய இனிமையான குரலில் இந்தப் பாடல்கள் கர்ணாமிர்த கானமாக ஒலிப்பதை யாவரும் அறிவர்

இலங்கையில், கொழும்பு, பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தினர் தான் முதன் முதலாக சாயி பாபாவினுடைய பிறந்தநாள் விழாவிலே, ஊஞ்சல் நிகழ்ச்சியை இடம்பெறச் செய்தவர்கள் ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானுடைய திருவுருவப் படத்தை ஊஞ்சலில் ஆரோகணித்து, புட்டபர்த்தியில் நிகழ்வது போல ஊஞ்சலாட்டி, மூன்று பஞ்சாலாத்திகளை ஏக காலத்தில் காட்டி விழாவினை நிறைவு செய்வார்கள். இந்த முறை வேறு எங்கும் அநுஷ்டிக்கப்படுவதில்லை.

ஆலயங்களின் திருவூஞ்சல் நிகழ்ச்சியின்போது பெருமானுக்கு ஊஞ்சல் பாட்டு, எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் ஆகிய பாடல்கள் பாடப்படுவது உண்டல்லவா?

அவ்வாறே, பகவான் பாபா ஊஞ்சலில் ஆடும்போதும் ஊஞ்சல் பாடல்கள் பாடப்படவேண்டுமென சாயி பக்தர்கள் விரும்பியதால், பஜனமிர்தவாரி வி. நாராயணதாஸ் அவர்களுடைய ஆலோசனையின் பேரில், பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா ஊஞ்சல் பாடல்களை யாத்து உதவினர் திரு. சி. பரராஜசிங்கம் அவர்கள்.

அவர் எழுதிய இந்தப் பாடல்கள் இசை நயமும், ஓசை நயமும் பெற்று சிறப்பாகவும், அழகாகவும், பொருள் செறிந்தனவாகவும் அமைந்தமை ஓர் அற்புதமாகும். இது பகவான் அருளாலேயே அப்படி நேர்ந்தது என்பது திரு. பரராஜசிங்கத்தின் கருத்து.

இந்நூல் 1970 ஆம் ஆண்டிலே, பகவானுடைய 45வது பிறந்த தின விழாவின்போது மெய்கண்டான் அதிபர் திரு. நா. இரத்தினசபாபதி அவர்களால் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது. இப்போது சுமார் 20 வருடங்களின் பின் இரண்டாவது பதிப்பு வெளிவருகிறது. சாயி அன்பர்களுக்கு இந்த திருவூஞ்சல் பாடல்கள் தெவிட்டாத இன்பம் தரும் என்பதில் சந்தேகம் இல்லை

**எஸ். டி. சிவநாயகம்**
தலைவர்,
பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா
மத்திய நிலையம், கொழும்பு.

கமலா மோடி கலா கேந்திரம்
26, விவேகானந்த மேடு,
கொழும்பு-13.
23 - 11 - 1989.



# திருவூஞ்சல்

1. உலகநிலை யுறுதர்மம் கால்களாக
உன்னதமாம் சத்தியமே விட்டமாக
மலவிருளே அகல்சாந்தி இழையதாக
மனுக்குலம் உய்பிரேமையதே கயிறதாக
நிவவினொளிர் ஞானமதே பலகையாக
நீடுபிரபஞ்ச மெனும் ஊஞ்சல்மேவி
தலம்புகழும் பெங்களூர் புட்டபர்த்தி
சத்யசா யீஸ்வரனே ஆடீரூஞ்சல்

2. மறையோதும் அந்தணர்கள் மகிழ்ந்துபோற்ற
வைஷ்ணவரும் சைவருமே மலர்கள்தூவ
இறையோனும் பரமபிதா இயேசு அன்பர்
இஸ்லாத்தைத் தழுவிடுவோர் இறைஞ்சி ஏத்த
கறைமலிந்த இதயத்தின் இருளகன்று
கருணைநெறிப் புத்தர்களும் கரங்கள்கூப்ப
துறையுணரு ஞானியரும் தொழுது ஏத்த
தூயசா யீஸ்வரனே ஆடீரூஞ்சல்

3. சந்தேக நிவாரணியே ஆடீரூஞ்சல்
தத்வபோ தகாயநம ஆடீரூஞ்சல்
சிந்தாகுலங் களைவாய் ஆடீரூஞ்சல்
சிர்டிசாயி மூர்த்தயே ஆடீரூஞ்சல்
நந்தா விளக்கனையாய் ஆடீரூஞ்சல்
ஞானஸ்வ ரூபாய ஆடீரூஞ்சல்
எந்தாயும் தாதையுமே ஆடீரூஞ்சல்
எழிற்சாயி ஈஸ்வரனே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முத்திப் ப்ரதாயகனே ஆடீரூஞ்சல்
மும்மைக்குந் துணைவனே ஆடீரூஞ்சல்
பக்தர்கள்தம் ரட்சகனே ஆடீரூஞ்சல்
பரமஅவ தாரநம ஆடீரூஞ்சல்
நித்யநிர் மலசுகுண ஆடீரூஞ்சல்
நிஷ்கள நிரஞ்சனே ஆடீரூஞ்சல்
சித்துகளில் வல்லவனே ஆடீரூஞ்சல்
சிவசாயி ஈஸ்வரனே ஆடீரூஞ்சல்

5. எல்லையிலா ஆனந்தனே ஆடீரூஞ்சல்
ஈஸ்வராம் பிகைசுதனே ஆடீரூஞ்சல்
தொல்லைவினை களைபவனே ஆடீரூஞ்சல்
தூயபிரே மாத்மனே ஆடீரூஞ்சல்
இல்லைபயம் என்பவனே ஆடீரூஞ்சல்
எழில்அபயக் கரத்தவனே ஆடீரூஞ்சல்
கொல்லுபகை வெல்தகையே ஆடீரூஞ்சல்
கோதில்சத்ய நாரணனே ஆடீரூஞ்சல்

6. மனுக்குலத்தோர் உலகெங்கும் வந்து ஏத்த
வரையாதுன் அமுதமதை மாந்தியுய்ய
அனுக்கிரகம் பெற்றோர்தம் வினைகள்நீங்க
ஆதிபுரு ஷாயநம ஆடீரூஞ்சல்
மினுக்குலக வாழ்க்கையற ஞானமோங்க
மெய்யுலக வாழ்வுபெற மார்க்கங் காட்டும்
மனக்குதிரைச் சாரதியே ஆடீரூஞ்சல்
ம்கேஸ்வரனே சாயிராம் ஆடீரூஞ்சல்



7. தொண்டர்குழாம் தொழுவோர்க்குச் சேவைசெய்ய
துதிப்பவர்கள் பஜனையிலே தோய்ந்துநிற்க
மண்டலிகள் தோறுமிறை வழங்கும்ஞானம்
மாந்துபவர் கூடிநிதம் மனமாண்பெய்த
கண்டவர்கள் விண்டறியாக் கமலப்பாதம்
காத்துநிதம் ஏத்திடுவர் கமலச்செங்கண்
அண்டர்கள்தம் நாயகனே அவதாரமூர்த்தி
ஆதிபல்லி சோமப்பா ஆடீரூஞ்சல்

8. துதிபகரும் பஜனைகுழாம் சூழ்ந்துபாட
தொண்டரணி தஞ்சேவை துரிதாயாற்ற
முதிர்வுறுநல் ஞானியர்கள் கவரிவீச
முந்திடுபல் சமயிகளும் கவிகைதாங்க
எதிர்வருநற் பக்தர்குழாம் மலர்கள்தூவ
எண்ணரிய மனுக்குலத்தோர் இறைஞ்சிஏத்த
கதிர்விடுபொற் சிகையோனே ஆடீரூஞ்சல்
ஹரிகிருஷ்ண சாயியே ஆடீரூஞ்சல்

9. வேதமதை யோதுமொலி விண்ணைமுட்ட
மெய்யடியார் துதிக்குமொலி மிகுந்துகேட்க
நாதமிரு தங்கஇசை நன்கு சேர
நரம்பினிசை யாழினொலி நயங்கள்கூட்ட
பாதபங் கயம்வியந்த பஜனைமாந்திப்
பாலர்விருத் தாப்பியர்தம் பயனென்றேத்த
கீதையுப தேசிகனே ஆடீரூஞ்சல்
கிருஷ்ணசா யீஸ்வரனே ஆடீரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மறைவாழி மனுக்குலத்தோர் வாழிவாழி
மழைவாழி மாதர்கள்தம் கற்பும்வாழி
இறைநாமம் ஏத்துபவர் என்றும்வாழி
ஈடில்லாப் பரங்கருணை வாழிவாழி
குறையாச்செள பாக்கியங்கள் கொழித்துவாழி
கோடிநலம் பாரிலுளோர் கூடிவாழி
நிறையோங்கு பிரசாந்தி நிலயம்வாழி
நின்மலசா யீஸ்வரனே வாழிவாழி.

*திருவூஞ்சல் முற்றிற்று*

★

## எ ச் ச ரி க் கை

1. ஹரிமாதவ சிவசாயியே
அமரா எச்சரிக்கை
அவதாரசற் குரு நாதவோங்
காரா எச்சரிக்கை
பவ சாகரப் புணையே பர
மாத்மா எச்சரிக்கை
பஜனுமிர்தப் பயனே பர்த்திப்
பரனே எச்சரிக்கை

2. மறைபோதக நிறைஞானவிற்
பன்னு எச்சரிக்கை
மதமாச்சர்ய மலநாசக
மகிபா எச்சரிக்கை
குறையா அருட் குவையே குணக்
குன்றே எச்சரிக்கை
குகனே சர வணனே கஜ
முகனே எச்சரிக்கை



3. மருளே அகல் அருளே தவப்
பொருளே எச்சரிக்கை
மதுராதிப அபயாவர
மகிபா எச்சரிக்கை
கருணைநிதி ஹரிநாரண
கதியே எச்சரிக்கை
கமலாசன இமவாரணக்
கண்ணு எச்சரிக்கை

4. உமைநாரணி சிவை சாம்பவி
உஷையே எச்சரிக்கை
உறவேயுனை நினைவோர்க்குறு
துணையே எச்சரிக்கை
எமை ஏற்றிடு பிரசாந்தியின்
இறையே எச்சரிக்கை
இகலோக சற் பொருளே சா
யீசா எச்சரிக்கை

*எச்சரிக்கை முற்றிற்று.*

★

## ப ரா க் கு

1. தலமோங்கு பர்த்திபுரித் தலைவா பராக்கு
ஜகந்நாத சிவராம சாயி பராக்கு
மலமாயை மறைமார்க்கக் குருவே பராக்கு
மாதவரும் காணரிய மாயா பராக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயகர நீற்றேனே அரனே பராக்கு
ஆதிபுருஷாய ஹரிராமா பராக்கு
இமயகிரி வாசஎழிற்சாயி பராக்கு
ஈஸ்வராம் பிகைசுதனே இறைவா பராக்கு

புருசோத்ம புவனேச புண்யா பராக்கு
புட்டபர்த் திபுரிநற் புனிதா பராக்கு

*பராக்கு முற்றிற்று*

✶

# இ லா லி

1. மாய லாலி மறை போதலாலி—லோக
மக்கள் மகிழ் சித்த நிறை முத்தலாலி
தூயலாலி சிவசாயி லாலி—பரி
சுத்தமாய வித்தை புரி சித்தலாலி

2. ஆத்மலாலி பரமாத்மலாலி—உயர்
ஆக்கமுறு வாக்குதிரும் அண்ணல்லாலி
பார்த்த லாலி பர்த்திப்பதியே லாலி-சத்யம்
தர்மம் சாந்திப் பிரேமை தங்கு—தலைவலாலி

*இலாலி முற்றிற்று.*



# ம ங் க ள ம்

1. சத்ய நாரணத்வருக்கு மங்களம்—தூய
தத்வ போதகாயருக்கு மங்களம்
பர்த்திபுரி வாசருக்கு மங்களம்—எங்கள்
பாசவினை நாசருக்கு மங்களம்.

2. சித்துகளில் வல்லவர்க்கு மங்களம்-தெய்வ
சில அவ தாரருக்கு மங்களம்
முத்திநெறி மூலருக்கு மங்களம்—அன்பு
முதிருமல முத்தருக்கு மங்களம்

3. சர்வமத சம்மதற்கு மங்களம்—சிவ
சத்யசாயி ரூபருக்கு மங்களம்
மர்ம அவதாரருக்கு மங்களம்—பக்தர்
வாழ்வில் ஒளியானவர்க்கு மங்களம்

*மங்களம் முற்றிற்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சத்தியம்

★ தர்மம்

★ சாந்தி

★ பிரேமை

★ அஹிம்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப் பதிப்பு :

துர்க்கா அச்சகம்

258/5, டாம் வீதி,

கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org